



# மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை

## மானியக் கோரிக்கை எண் : 19

### அறிவிப்புகள்

### 2022 – 2023

# மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

## மானியக் கோரிக்கை எண் : 19

# அறிவிப்புகள்
# 2022 - 2023

**திரு. மா. சுப்பிரமணியன்**
மருத்துவம் மற்றும் மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர்

# பொருளடக்கம்



| வ. எண் | பெருந்தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| I | அரசு மருத்துவமனை கட்டமைப்பு | 3–16 |
| II | மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டமைப்பு | 19–25 |
| III | இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் –48 திட்டம் | 29–37 |
| IV | கிராம நலவாழ்வுச் சேவை | 41–54 |
| V | நகர்ப்புற நலவாழ்வு | 57–67 |
| VI | மக்களைத் தேடி மருத்துவம் | 71–72 |
| VII | காசநோய் தடுப்பு | 75–77 |
| VIII | மகப்பேறு மருத்துவ சேவைகள் | 81–87 |
| IX | பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள் | 91–95 |
| X | புற்றுநோய் மருத்துவ சேவைகள் | 99–106 |
| XI | சிறப்பு மருத்துவ சேவைகள் | 109–125 |
| XII | நவீன மருத்துவ உபகரணங்கள் | 129–137 |
| XIII | 'இ'–சுகாதார சேவைகள் | 141–147 |
| XIV | மன நல மருத்துவம் | 151–153 |
| XV | மருத்துவமனை மேலாண்மை | 157–163 |
| XVI | சுகாதார விழிப்புணர்வு சேவைகள் | 167–172 |
| XVII | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி | 175–183 |

# I – அரசு மருத்துவமனை கட்டமைப்பு

**1. புதிய மாவட்ட தலைமை மருத்துவமனை அமைத்தல் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூபாய் 1018.85 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், ராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர், திருப்பத்தூர், காங்கேயம், குடியாத்தம், திண்டிவனம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய 19 அரசு மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் மற்றும் தென்காசி, குளித்தலை, திருச்செங்கோடு, அம்பாசமுத்திரம் மற்றும் இராஜபாளையம் ஆகிய 5 அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் இல்லாத 24 மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கிட புதிய மாவட்ட தலைமை மருத்துவமனை அமைத்தல் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர்,

மயிலாடுதுறை, வேதாரண்யம், ராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர், திருப்பத்தூர், காங்கேயம், குடியாத்தம், திண்டிவனம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய 19 அரசு மருத்துவமனைகள் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் மற்றும் தென்காசி, குளித்தலை, திருச்செங்கோடு, அம்பாசமுத்திரம் மற்றும் இராஜபாளையம் ஆகிய 5 அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் ரூபாய் 1018.85 கோடி மதிப்பீட்டில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தப்படும்.

## 2. புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் அதிக அளவிலான ஆய்வக பரிசோதனைகள் மாவட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் (Integrated Lab) திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், திருப்பத்தூர், திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை (செய்யார்) ஆகிய 12 மாவட்டங்களிலுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**3. பரமக்குடி, கோவில்பட்டி, மணப்பாறை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, மன்னார்குடி, கும்பகோணம், சிவகாசி ஆகிய அரசு மருத்துவமனைகள், ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் மாநில பொது சுகாதார மையம் ஆகிய 10 இடங்களில் பன்றி காய்ச்சல், டெங்கு, எலி காய்ச்சல், சிக்குன்குனியா, நிபா உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல்களை கண்டறிய ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் புதிய RT–PCR பரிசோதனை கருவிகள் நிறுவப்படும்.**

பரமக்குடி, கோவில்பட்டி, மணப்பாறை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, மன்னார்குடி, கும்பகோணம், சிவகாசி அரசு மருத்துவமனைகள், ஓமந்தூரார் அரசு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, மற்றும் மாநில பொது சுகாதார மையம் ஆகிய 10 இடங்களில் பன்றி காய்ச்சல், டெங்கு, எலி காய்ச்சல், சிக்குங்குனியா, நிபா உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல்களை கண்டறிய புதிய RT–PCR பரிசோதனை கருவிகள் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் 12.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 4. காஞ்சிபுரம் மாவட்டம்–உத்திரமேரூர் அரசு தாலுக்கா மருத்துவமனை உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அரசு தாலுக்கா மருத்துவமனை பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் சுமார் 4.5 இலட்சம் மக்கள் மருத்துவ வசதி பெறுகின்றன. எனவே, அம்மருத்துவமனையில் பழுதடைந்த நிலையில் உள்ள மருத்துவர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு மற்றும் பிற பழுதடைந்த கட்டடங்களைஇடித்துவிட்டு 0.72 ஏக்கர் நிலப்பரப்பில் 80 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை, தரை தளத்துடன் கூடிய 3 அடுக்குமாடி கட்டடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 5. தென்காசி மாவட்டம்–ஆலங்குளம் அரசு மருத்துவமனை ரூபாய் 10 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

தென்காசி மாவட்டம்–ஆலங்குளம் அரசு மருத்துவமனை ரூபாய் 10 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

**6. திருவள்ளூர் மாவட்டம்–ஆவடி, திருப்பூர் மாவட்டம்–வேலம்பாளையம், திருநெல்வேலி மாவட்டம்–கண்டிகைபேரி, சேலம் மாவட்டம்–அம்மாபேட்டை ஆகிய நகர்ப்புற மருத்துவமனைகளுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 5.85 கோடி மதிப்பீட்டில் நவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.**

திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி, திருப்பூர் மாவட்டம் – வேலம்பாளையம்–, திருநெல்வேலி மாவட்டம் –கண்டிகைபேரி, சேலம் மாவட்டம் – அம்மாபேட்டை ஆகிய நகர்புற மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நிறைவடையவுள்ள கட்டடங்களுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் 5.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

**7. தமிழ்நாட்டில் 25 அரசு மருத்துவமனைகளில், பச்சிளங்குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக, ஒலி புகா அறை மற்றும் நவீன உபகரணங்கள் ரூபாய் 5 கோடி செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் பிரசவங்கள் நடைபெறும் 25 அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகளின் செவித்திறனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சைகள் வழங்க தலா ரூபாய் 20 இலட்சம் வீதம், ஒலி புகா அறை மற்றும் நவீன உபகரணங்கள் (OAE, BERA), ரூபாய் 5 கோடி செலவில் வழங்கப்படும்.

## 8. திருவண்ணாமலை மாவட்டம்–வந்தவாசி அரசு மருத்துவமனையில் மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்

திருவண்ணாமலை மாவட்டம்–வந்தவாசி அரசு மருத்துவமனையில் மேம்பாட்டுப் பணிகளுக்காக புதிய கட்டடங்கள், சி.டி.ஸ்கேன் கருவி மற்றும் மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 9. செங்கல்பட்டு மாவட்டம்—செய்யூர் அரசு வட்ட மருத்துவமனை ரூபாய் 2.20 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அரசு வட்ட மருத்துவமனையை தரம் உயர்த்த ரூபாய் 2.20 கோடி செலவில் கட்டடங்கள், தளவாடங்கள், உபகரணங்களுடன் தரம் உயர்த்தப்படும்.

**10. சென்னை, கிண்டியில் உள்ள கிங்ஸ் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், உடற்கூறு திசுக்களை சுத்திகரிக்க நவீன காமா நுண்கதிர் அறை ரூபாய் 1.90 கோடி செலவில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் சென்னை, கிண்டியில் உள்ள கிங்ஸ் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், உடற்கூறு திசுக்களுக்கான பனிக்குட சவ்வு (Amnion), எலும்பு திசு (Bone Graft) போன்றவற்றை சுத்திகரிக்க, நவீன காமா நுண்கதிர் அறை ரூபாய் 1.90 கோடி செலவில் கட்டப்படும்.

**11. சென்னை–பெரியார் நகர், நாமக்கல் மாவட்டம்–கொல்லிமலை, நீலகிரி மாவட்டம்–கோத்தகிரி, அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் தேவையான கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வழங்கி 3 இரத்த வங்கிகள் அமைக்கப்படும்.**

சென்னை–பெரியார் நகர், நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை, நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி ஆகிய 3 அரசு மருத்துவமனைகளில் 3 இரத்த வங்கிகள் தேவையான கட்டமைப்பு மற்றும் உபகரணங்களுடன் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**12. சேலம் மாவட்டம்–ஏற்காடு அரசு மருத்துவ மனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 1.05 கோடி மதிப்பீட்டில் நவீன பிரேத பரிசோதனை கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கப்படும்.**

சேலம் மாவட்டம் – ஏற்காடு அரசு மருத்துவ மனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 1.05 கோடி மதிப்பீட்டில் நவீன பிரேத பரிசோதனை கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கப்படும்.

## 13. திருநெல்வேலி மாவட்டம்–களக்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் விஷ முறிவு சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் விஷ முறிவு சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

# II – மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டமைப்பு

## 14. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கப்படும்.

சென்னை– கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க உலக வங்கி திட்டத்தின் கீழ் 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கப்படும்

**15. கோயம்புத்தூர், மதுரை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ஜப்பான் பன்னாட்டு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 110 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.**

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார திட்டதில் கோயம்பத்தூர், மதுரை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நிறைவடையவுள்ள கட்டடங்களுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 110.00 கோடி மதிப்பீட்டில் உயர்தர மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

**16. சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில், முழு உடல் பரிசோதனை, விபத்து காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்க உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 71.81 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.**

சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்து காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்க உலக வங்கி திட்டத்தின் கீழ் 71.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

**17. சென்னை–ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், பொதுமக்கள் சிறந்த மருத்துவ சேவையை பெறுவதற்காக, நவீன உபகரணங்களுடன் புதிய நரம்பியல் பிரிவு கட்டடம் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தினமும் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வந்து செல்லும் சென்னை–ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், பொதுமக்கள் சிறந்த மருத்துவ சேவையை பெறுவதற்காக, படிப்படியாக புதிய கட்டிடங்கள் கட்டப்படும். முதல் கட்டமாக இவ்வாண்டு, நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகள் கொண்ட புதிய நரம்பியல் பிரிவு கட்டடம் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

**18. சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சேலம், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இதய நோய்களுக்கான சிகிச்சை முறைகளை வலுப்படுத்த, கேத்லேப் (Cathlab) கருவிகள் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் இதயநோய்களுக்கான சிகிச்சை முறைகளை வலுப்படுத்த சேலம், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் இருதய சிகிச்சை பிரிவிற்கும் மற்றும் சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நரம்பியல் பிரிவிற்கும் தலா ரூபாய் 4 கோடி வீதம் கேத்லேப் (Cathlab) கருவிகள் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 19. நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI) ரூபாய் 8.5 கோடி செலவில் வழங்கப்படும்.

நீலகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தற்போது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக நடப்பு கல்வி ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவ மனைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கேன் ரூபாய் 8.5 கோடி செலவில் நிறுவப்படும்.

**20. நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம், HPLC கருவி மற்றும் வேதியியல் பொருட்கள் வழங்கப்படும்.**

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம், HPLC கருவி மற்றும் வேதியியல் பொருட்கள் வழங்கப்படும்.

# III – இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் – 48 திட்டம்

**21\. இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்–48 திட்டத்தினை மேலும் வலுப்படுத்த செங்கல்பட்டு, தருமபுரி, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் ஒட்டன்சத்திரம், சீர்காழி, மேலூர், ஊத்தங்கரை ஆகிய 4 அரசு மருத்துவ மனைகளிலும் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Blocks) ரூபாய் 237.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் – 48 என்ற உன்னத திட்டத்தின் கீழ் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தினை மேலும் வலுப்படுத்தி, மக்கள் பயன்பெறும் வகையில் செங்கல்பட்டு, தருமபுரி, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், மயிலாடுதுறை மாவட்டம் – சீர்காழி, மதுரை மாவட்டம்–மேலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்–ஊத்தங்கரை ஆகிய 4 அரசு மருத்துவமனைகளிலும் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு (Critical Care Blocks) ரூபாய் 237.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**22. இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் – 48 திட்டத்தின் கீழ் தென் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் 100 படுக்கைகளுடன் நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவமனை புதியதாக ரூபாய் 60.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் – 48 திட்டத்தின் கீழ் தென் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் 100 படுக்கைகளுடன் நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவமனை ரூபாய் 60.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 23. இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்–48 திட்டத்தின் கீழ் கடலூர் அரசு மருத்துவமனையில் 100 படுக்கை வசதி கொண்ட புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் கடலூர் அரசு மருத்துவமனையில் 100 படுக்கை வசதி கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு புதியதாக ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**24. இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும்–48 திட்டத்தின் கீழ் உயிர் காக்கும் அவசர சிகிச்சை உரிய நேரத்தில் வழங்கிட 7 அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 14.70 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி ஸ்கேன் (CT Scan) கருவிகள் வழங்கப்படும்.**

இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும்–48 திட்டத்தின் கீழ் சிகிச்சை வழங்க 222 அரசு மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும்–48 திட்டத்தின் கீழ் உயிர் காக்கும் அவசர சிகிச்சை உரிய நேரத்தில் வழங்கிட பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, பொன்னேரி, கொடைக்கானல், திருச்செங்கோடு, ஆவடி, சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைகள், மற்றும் தாம்பரம், அரசு நெஞ்சகநோய் மருத்துவமனை ஆகிய 7 அரசு மருத்துவ மனைகளுக்கு தலா ரூபாய் 2.10 கோடி வீதம் ரூபாய் 14.70 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி ஸ்கேன் (CT Scan) கருவிகள் வழங்கப்படும்.

**25. சிவகங்கை மாவட்டம்–திருப்பத்தூர், விருதுநகர் மாவட்டம்–சாத்தூர், கடலூர் மாவட்டம்–விருதாச்சலம், திருவண்ணாமலை மாவட்டம்–செங்கம், தருமபுரி மாவட்டம்– பாலக்கோடு ஆகிய அரசு மருத்துவமனைகளில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 11.62 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்படும்.**

சிவகங்கை மாவட்டம்–திருப்பத்தூர், விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், கடலூர் மாவட்டம் – விருதாச்சலம், திருவண்ணாமலை மாவட்டம் – செங்கம், தருமபுரி மாவட்டம் – பாலக்கோடு– ஆகிய அரசு மருத்துவமனைகளில் உலக வங்கி திட்டத்தின் கீழ் 11.62 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு தொடங்கப்படும்.

**26. இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்–48 திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் ஈ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், வாழப்பாடி, சங்ககிரி, பவானி, மேட்டுப்பாளையம் மற்றும் பொன்னேரி மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களுக்கு, நவீன உபகரணங்கள் ரூபாய் 2.76 கோடி செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டு வரும் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்–48 திட்டத்தின் கீழ் உயிர் காக்கும் அவசர சிகிச்சை உரிய நேரத்தில் வழங்கிட கோயம்புத்தூர், ஈ.எஸ்.ஐ. மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், வேதாரண்யம், வாழப்பாடி, சங்ககிரி, பவானி, மேட்டுப்பாளையம் மற்றும் பொன்னேரி ஆகிய அரசு மருத்துவமனைகள் உட்பட 8 விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களுக்கு, நவீன உபகரணங்கள் ரூபாய் 2.76 கோடி செலவில் வழங்கப்படும்.

**27. தருமபுரி மாவட்டம்–அரூர் மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 2.30 கோடி மதிப்பீட்டில் சி.டி. ஸ்கேன் மற்றும் C–arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) வழங்கப்படும்.**

தருமபுரி மாவட்டம் – அரூர் மாவட்ட மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் 2.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் CT scan மற்றும் C–arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) வழங்கப்படும்.

**28. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், விபத்து மற்றும் சிகிச்சை மையங்களில், விபத்து பதிவுக்கான தரவுகளை பதிவேற்றம் செய்ய புதிய மென்பொருள் (Trauma Registry Software) ரூபாய் 2 கோடி செலவில் உருவாக்கப்படும்.**

அனைத்து மாவட்டங்களிலும், விபத்து மற்றும் சிகிச்சை மையங்களில், விபத்து பதிவுக்கான தரவுகளை பதிவேற்றம் செய்ய புதிய மென்பொருள் (Trauma Registry Software) ரூபாய் 2 கோடி செலவில் உருவாக்கப்படும்.

## 29. இராமநாதபுரம் மாவட்டம்–பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் C–arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) வழங்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் C–arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) வழங்கப்படும்.

# IV – கிராம நலவாழ்வுச் சேவை

**30. வட்டார அளவிலான பொது சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்தும் விதமாக 178 வட்டாரங்களில் புதியதாக வட்டார பொது சுகாதார அலகுகளுக்கான (Block Level Public Health Units) புதிய கட்டடங்கள் ரூபாய் 143.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வலிமைபடுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தி வழங்கிட, முதற்கட்டமாக 178 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொது சுகாதார ஆய்வகம், காணொளி மருத்துவச் சேவை, சுகாதார தகவல் மேலாண்மை உள்ளடக்கிய வட்டார பொது சுகாதார அலகுகளுக்கான (Block Level Public Health Units) புதிய கட்டடங்கள் ரூபாய் 143.96 கோடி மதிப்பீட்டில் வலிமைப்படுத்தப்படும்.

**31. ஊரக பகுதிகளில் வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வரும் 316 துணை சுகாதார நிலையங்களுக்கு புதிதாக கட்டடங்கள் ரூபாய் 102.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஊரகப் பகுதிகளில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,742 துணை சுகாதார நிலையங்கள் வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக, 316 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 102.61 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டடங்கள் கட்டப்படும்.

**32. ஊரக பகுதிகளில் செயல்படும் 48 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 39.80 கோடி மதிப்பீட்டில் 15–வது நிதிக் குழு நிதியில் கட்டப்படும்.**

வாடகை கட்டடங்களில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. ஊரக பகுதிகளில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சேவைகளை மேம்படுத்த 48 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 39.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**33. கிராமப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 25 புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் நிறுவப்படும்.**

தற்போது தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் 1,804 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 25 புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**34. மயிலாடுதுறை மாவட்டம் – திருவெண்காடு, கடலூர் மாவட்டம் – நெல்லிக்குப்பம், திண்டுக்கல் மாவட்டம் – கீரனூர் மற்றும் இடைக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம்–மைலம், ஈரோடு மாவட்டம்–மொடக்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்–கரிசல்பட்டி மற்றும் இராமநாதபுரம் மாவட்டம்–ஆர்.எஸ்.மங்களம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 14.21 கோடி செலவில் நவீன உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம் – திருவெண்காடு, கடலூர் மாவட்டம்–நெல்லிக்குப்பம், திண்டுக்கல் மாவட்டம்–கீரனூர் மற்றும் இடைக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம் – மைலம், ஈரோடு மாவட்டம்–மொடக்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்–கரிசல்பட்டி மற்றும் இராமநாதபுரம் மாவட்டம்–ஆர்.எஸ்.மங்களம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 14.21 கோடி செலவில் நவீன உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**35. 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியருக்கான குடியிருப்புகள் ரூபாய் 2 கோடி செலவில் புதியதாக தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம் – காரமடை, தருமபுரி மாவட்டம் –கீரைப்பட்டி, ஈரோடு மாவட்டம் – சிவகிரி, நாமக்கல் மாவட்டம் – புதுச்சத்திரம், இராணிப்பேட்டை மாவட்டம் – அரிகில்பாடி, தஞ்சாவூர் மாவட்டம் – பட்டீஸ்வரம், தேனி மாவட்டம் – சிலமலை, திருநெல்வேலி மாவட்டம் – வைராவிகுளம், திருப்பூர் மாவட்டம் – செம்மிப்பாளையம், திருவண்ணாமலை மாவட்டம் – காளிக்குளம் ஆகிய 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் செவிலியர்கள் தங்கி பணிபுரிவதற்கு ஏதுவாக தலா ரூபாய் 20 இலட்சம் வீதம், ரூபாய் 2 கோடி செலவில் புதியதாக குடியிருப்புகள் கட்டப்படும்.

## 36. 400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 4 கோடி செலவில் பசுமையான இயற்கை சுற்றுச்சூழல் நிறைந்த ஒளிர்மிகு ஆரம்ப சுகாதார நிலையங்களாக அழகுபடுத்தப்படும்.

தற்போது தமிழகத்தில் 400 வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்நோயாளிகள் மற்றும் புற நோயாளிகளுக்கு மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் இனிமையான, பசுமையான, இயற்கை சுற்றுச்சூழலுடன் இருந்தால், நோயாளிகள் விரைந்து குணமடைய வாய்ப்புள்ளது. நடப்பு நிதியாண்டில் 400 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மரக்கன்றுகள் மற்றும் தோட்டம் பராமரிப்பு, ஒளியுமிழ் இருமுனை விளக்குகள் அமைத்து குளிர்ச்சியூட்டும் மேற்கூரை வண்ணப்பூச்சு புதுப்பித்து சூரிய ஒளி ஆற்றல் நிலையங்களாக மாற்றி இயற்கை சூழலுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களாக ரூபாய் 4 கோடி செலவில் மாற்றப்படும்.

**37. புதுக்கோட்டை மாவட்டம்–காரையூர் மற்றும் புதுநகர், சிவகங்கை மாவட்டம்–பூவந்தி, விருதுநகர் மாவட்டம் – தாயில்பட்டி மற்றும் ஜமீன் கொல்லன்கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம் – மங்களம், தூத்துக்குடி மாவட்டம்–புதுக்கோட்டை மற்றும் தென்காசி மாவட்டம்–செங்கோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் இரத்த சேமிப்பு அலகு நிறுவப்படும்.**

புதுக்கோட்டை மாவட்டம்–காரையூர் மற்றும் புதுநகர், சிவகங்கை மாவட்டம்–பூவந்தி, விருதுநகர் மாவட்டம்–தாயில்பட்டி மற்றும் ஜமீன் கொல்லன்கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம்–மங்களம், தூத்துக்குடி மாவட்டம்–புதுக்கோட்டை மற்றும் தென்காசி மாவட்டம்–செங்கோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் இரத்த சேமிப்பு அலகு நிறுவப்படும்

## 38. பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்பு ரூபாய் 60 இலட்சம் செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள 2 மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இங்கு செவிலியர் குடியிருப்பு எதுவும் இல்லை. பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்படும்.

**39. திட்டப் பணிகளில் பணியாற்றும் 114 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நல அலுவலர் பணியிடங்களாக ரூபாய் 25 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.**

சுகாதாரத் துறையில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் தேசிய நலவாழ்வு திட்டத்தில் பணிபுரியும் உதவி திட்ட மேலாளர், மாவட்ட தொற்றா நோய்த் திட்ட அலுவலர், மாவட்ட தொற்றுநோய் திட்ட வல்லுநர் போன்ற மருத்துவ அலுவலர் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு அரசின் சுகாதார திட்டங்களை பொதுமக்களுக்கு செவ்வனே கொண்டு சேர்க்க இந்த 114 மருத்துவ அலுவலர் (Medical Officer) பணியிடங்கள், நல அலுவலர் (Health Officer) பணியிடங்களாக தரம் உயர்த்தப்படும்.

## 40. தேனி மாவட்டம்–இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு அமைக்கப்படும்.

தேனி மாவட்டம் – இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு அமைக்கப்படும்.

## 41. இராமநாதபுரம் மாவட்டம்–உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை மேசை (Hydraulic Type) வழங்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் – உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை மேசை (Hydraulic type) வழங்கப்படும்.

## 42. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பொதுமக்களுக்கு நீரிழிவு நோய் பரிசோதனை காலை 7 மணி முதல் செய்யப்படும்.

தமிழகத்தில் மொத்தம் 29.64 லட்சம் நீரிழிவு நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மக்களைத் தேடி மருத்துவ திட்ட முகாம்களின் மூலம் மேலும் 62 இலட்சம் சர்க்கரை நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை உணவுக்கு முன் மற்றும் உணவிற்கு பின் இரத்த மாதிரி பரிசோதனை செய்து, பரிசோதனையின் முடிவினை கொண்டு சிகிச்சை முறை தீர்மானிக்கப்பட வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுவதால், இதில் பணிபுரியும் பணியாளர்களைக் கொண்டு காலை 9 மணி முதல் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், இனி வரும் நாட்களில், காலை 7 மணி முதல் இரத்த மாதிரி (உணவிற்கு முன் மற்றும் உணவிற்கு பின்) பரிசோதனை செய்யப்பட்டு, அதன் முடிவுகள் பொது மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

## 43. பொது சுகாதாரத் துறையின் நூற்றாண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில், பன்னாட்டு பொது சுகாதார மாநாடு நடத்தப்படும்.

தமிழகத்தில் லெப்டினனன்ட் கர்னல் ரஸ்ஸல் என்ற ஆங்கிலேயர் முதல் பொது சுகாதாரத் துறை இயக்குநராக 1922–ஆம் ஆண்டில் பணியேற்றார். 2022–ஆம் ஆண்டு பொது சுகாதாரத் துறையின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, பன்னாட்டு பொது சுகாதார மாநாடு சென்னையில் நடத்தப்படும்.

# V – நகர்ப்புற நலவாழ்வு

**44. நகர்ப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 25 புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 30 கோடி செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் நிறுவப்படும்.**

சென்னை பெருநகர மாநகராட்சியில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், இதர மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 263 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. நகர்ப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு மாநகராட்சி / நகராட்சிகளில் மேலும் 25 புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 30 கோடி செலவில் நிறுவப்படும்.

**45. 16 மாவட்டங்களில் 22 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 26.40 கோடி செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டம்– ஜமீன் பல்லாவரம், கரூர் மாவட்டம் – இனாம்கரூர் மற்றும் பசுபதிபாளையம், கிருஷ்ணகிரி மாவட்டம்– அப்பாவு நகர் மற்றும் அவளப்பள்ளி, கன்னியாகுமரி மாவட்டம் – வடிவீஸ்வரம், நாமக்கல் மாவட்டம் – இராசிபுரம், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், திருவள்ளூர் மாவட்டம் – பருத்திப்பட்டு, திருவேற்காடு மற்றும் திருவள்ளூர், இராணிப்பேட்டை மாவட்டம் – ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டம் – காமராஜர் ரோடு, நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம் மற்றும் கூடலூர், திருச்சி மாவட்டம் – மணப்பாறை, திருப்பூர் மாவட்டம் – பல்லடம், வேலூர் மாவட்டம்– அம்பேத்கார் நகர், நடுப்பேட்டை மற்றும் பேரணாம்பட்டு, விழுப்புரம் மாவட்டம்–விழுப்புரம், நாகப்பட்டினம் மாவட்டம்– வேதாரண்யம் ஆகிய இடங்களில் உள்ள 22 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 26.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**46. "தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார சீரமைப்பு திட்டத்தின்" கீழ் முதன்முறையாக அனைத்து 21 மாநகராட்சிகளில் நவீன உபகரணங்களுடன் கூடிய, 35 சுகாதார ஆய்வக கட்டடங்கள் ரூபாய் 17.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் முதன்முறையாக அனைத்து 21 மாநகராட்சிகளில் நவீன உபகரணங்களுடன் கூடிய, 35 சுகாதார ஆய்வகங்கள் சென்னை பெருநகர மாநகராட்சியில் 7 ஆய்வகங்கள், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சியில் தலா 3 ஆய்வகங்களும், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் தலா 2 ஆய்வகங்களும், திண்டுக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், ஓசூர், நாகர்கோவில், ஆவடி, கும்பகோணம், தாம்பரம், காஞ்சிபுரம், கடலூர், கரூர் மற்றும் சிவகாசி மாநகராட்சிகளில் தலா ஒரு ஆய்வக கட்டடம் ரூபாய் 17.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**47. "தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார சீரமைப்பு திட்டத்தின்" கீழ், சென்னை மாநகராட்சியில் 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 12 கோடி செலவில் புதிய கட்டடங்கள் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

சென்னை பெருநகர மாநகராட்சியில், திருவொற்றியூர் மண்டலம்–கத்திவாக்கம், தண்டையார்பேட்டை மண்டலம் – இளங்கோநகர் மற்றும் வியாசர்பாடி, இராயபுரம் மண்டலம் – அம்மன் கோயில், திரு.வி.க. நகர் மண்டலம் – நம்மாழ்வார்பேட்டை மற்றும் கொளத்தூர், அம்பத்தூர் மண்டலம் – கொரட்டூர், கோடம்பாக்கம் மண்டலம் – கோடம்பாக்கம் மற்றும் நெசப்பாக்கம், ஆலந்தூர் மண்டலம் – ஆதம்பாக்கம், அடையாறு மண்டலம் – கோட்டூர்புரம், பெருங்குடி மண்டலம் – புழுதிவாக்கம். ஆகிய 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூபாய் 1 கோடி வீதம், ரூபாய் 12 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**48. 36 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மருத்துவ மனைகள் மற்றும் 26 நகர பொது சுகாதார ஆய்வகங்களுக்கு கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக 62 கலர் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் ரூபாய் 7.44 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருப்பூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, வேலூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய 23 மாவட்டங்களில் உள்ள 36 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் மற்றும் 26 நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகங்களுக்கு தலா ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் நவீன கலர் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் மொத்தம் ரூபாய் 7.44 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**49. தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 4.80 கோடி செலவில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவை (Poly Clinic Services) வசதிகள் விரிவுபடுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் வாழும் பொது மக்களுக்கான சிறப்பு மருத்துவ தேவையை கருத்தில் கொண்டு, தற்போது 96 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நகர்ப்புற பல்நோக்கு சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், இதர மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள 28 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாலை நேரங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவைகள் (Poly Clinic Services), ரூபாய் 4.80 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்.

**50. தமிழ்நாட்டில் 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்த கூடுதல் கட்டடம் ரூபாய் 2.40 கோடி செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் விழுப்புரம் – கீழ்பெரும்பாக்கம், திருப்பூர்–பி.ஆர்.எம்.ஓம் (PRM Home), மதுரை–சுப்ரமணியபுரம், திருப்பூர் – வீரபாண்டி ஆகிய 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்த, கூடுதல் கட்டடம் ரூபாய் 2.4 கோடி செலவில் கட்டப்படும்.

**51. 24 மாவட்டங்களிலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எலக்ட்ரோ கார்டியோகிராபி, கார்டியோடோகோகிராபி மற்றும் இரத்த சேமிப்பு கிடங்கு உபகரணங்கள் ரூபாய் 1.76 கோடி செலவில் வழங்கப்படும்.**

ஒருங்கிணைந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களின் தாய்சேய் சேவைகளை மேம்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, நாமக்கல், இராணிப்பேட்டை, சேலம், தஞ்சாவூர், தேனி, தென்காசி, திருவள்ளூர், திருப்பூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நீலகிரி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எலக்ட்ரோ கார்டியோகிராபி கருவிகள், இரத்த சேமிப்பு கிடங்கு உபகரணங்கள் ரூபாய் 1.76 கோடி செலவில் வழங்கப்படும்.

## 52. திருப்பூர் மாவட்டம்—வேலம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

திருப்பூர் மாவட்டம்—வேலம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டத்தின் கீழ் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**53. அரியலூர், அம்பாசமுத்திரம், பல்லடம் உள்ளிட்ட 16 ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களாக ரூபாய் 80 இலட்சம் செலவில் மாற்றியமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களின் வளர்ச்சியாலும் பெருநகரங்களின் விரிவாக்கத்தினாலும், அறந்தாங்கி–அறந்தாங்கி (எ) எல்.என்.புரம், அரியலூர்–அரியலூர், கடலூர்–நெல்லிக்குப்பம், மதுரை–மேலூர், நாமக்கல்–பள்ளிப்பாளையம், திண்டுக்கல்–கொடைக்கானல், இராமநாதபுரம்–இராமேஸ்வரம், நீலகிரி–குன்னூர், தேனி–சின்னமனூர், தேனி–பெரியகுளம், தூத்துக்குடி–காயல்பட்டினம், திருச்சிராப்பள்ளி–மணப்பாறை, திருச்சிராப்பள்ளி–துறையூர், திருநெல்வேலி–அம்பாசமுத்திரம், திருப்பூர்–பல்லடம், ஈரோடு–திண்டல் ஆகிய 16 ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தலா ரூபாய் 5 இலட்சம் வீதம், ரூபாய் 80 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைக்கப்படும்.

## 54. நகர்ப்புற மக்களுக்கும் ஆரம்ப சுகாதார சேவைகள் உரிய நேரத்தில் உரிய முறையில் சென்றடைய "நகர்ப்புற சுகாதார சீரமைப்பு திட்டம்" (Tamil Nadu Urban Health Revamping Scheme) செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 48 விழுக்காடு மக்கள் தொகை நகர்ப்புறங்களில் வசிக்கின்ற நிலையில், நகர்ப்புற ஆரம்ப சுகாதார கட்டமைப்புகளை நகர்ப்புறங்களில் மேலும் வலிமைப்படுத்துவது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகிறது. தமிழ்நாட்டில், அடிப்படை சுகாதாரம் வழங்கும் வகையில், கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நிலையங்கள், பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் நிருவாக தலைமையின் கீழ் கொண்டு வந்து மனிதவளங்களை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களுக்கு வேறுபாடின்றி பகிர்ந்தளித்து, நகர்ப்புற ஆரம்ப சுகாதார கட்டமைப்பு மற்றும் சேவைகளை, நகர்ப்புற மக்களுக்கும் உரிய நேரத்தில் உரிய முறையில் சென்றடைய "நகர்புற சுகாதார சீரமைப்பு திட்டம்" (Tamil Nadu Urban Health Revamping Scheme) செயல்படுத்தப்படும்.

# VI – மக்களைத் தேடி மருத்துவம்

**55. "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் அனைவருக்கும் நலவாழ்வு எனும் இலக்கை அடைவதற்கு ஏதுவாக ரூபாய் 423.64 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகள் (Integrated Essential Laboratory Services) வழங்கப்படும்.**

"மக்களைத் தேடி மருத்துவம்" என்ற அரசின் மகத்தான திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை மேலும் மேம்படுத்தி விரிவாக்கம் செய்து அனைவருக்கும் நலவாழ்வு எனும் இலக்கை அடைய தமிழகத்திலுள்ள அனைத்து துணை சுகாதார மையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொற்றா நோய்க்கான மருந்துகள், நோய் கண்டறிதல் சேவைகள், கூடுதல் எண்ணிக்கையில் ஹப் & ஸ்போக் (HUB & SPOKE) முறையில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகள் (Integrated Essential Laboratory Services) வழங்க ரூபாய் 423.64 கோடி செலவிடப்படும்.

**56. மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் சேவைகளை மேம்படுத்தி அனைவருக்கும் நலவாழ்வு என்ற இலக்கினை அடைந்திடும் வகையில், ஊரக பகுதிகளில் உள்ள 2443 கிராம துணை சுகாதார நிலையங்கள் நல்வாழ்வு மையங்களாக ரூபாய் 34.42 கோடி செலவில் மாற்றியமைக்கப்படும்.**

அனைவருக்கும் நல வாழ்வு திட்டத்தின் கீழ் அனைத்து சுகாதார நிலையங்களும் படிப்படியாக நல வாழ்வு மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அந்த வகையில், மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் சேவைகளை மேம்படுத்தி அனைவருக்கும் நலவாழ்வு என இலக்கினை அடைந்திடும் வகையில், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 2443 கிராம துணை சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக ரூபாய் 34.42 கோடி செலவில் மாற்றியமைக்கப்படும்.

# VII – காசநோய் தடுப்பு

**57. 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்னும் இலக்கை அடைய அதிநவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள் ரூபாய் 48.85 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்னும் இலக்கை அடைய, காசநோய் மற்றும் மருந்து எதிர்ப்பு காசநோய் (Multi Drug Resistant TB) ஆகியவற்றை விரைவில் கண்டறிய அதிநவீன ஆய்வக உபகரணங்கள் (CBNAAT, Line Probe Assay, MGIT) மற்றும் நுகர்வு பொருட்கள் ரூபாய் 48.85 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**58. 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்னும் இலக்கை அடையும் விதமாக, 33 மாவட்டங்களில் காச நோய் தீவிர கணக்கெடுப்பின் மூலம் நோய் பாதிக்கப் பட்டவர்களை கண்டறியவும், உரிய சிகிச்சைகள் வழங்கவும் ரூபாய் 9.41 கோடி செலவிடப்படும்.**

2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்னும் இலக்கை அடைய ஏதுவாக, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 33 மாவட்டங்களில் காச நோய் தீவிர கணக்கெடுப்பு எடுத்து, நோய் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்க ரூபாய் 9.41 கோடி செலவிடப்படும்.

**59. தமிழ்நாட்டில் 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய, இந்தியாவிலேயே முதன்முறையாக, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகளில் எடுக்கப்படும் CT–Chest மற்றும் X–Ray படங்களை ஒருங்கிணைத்து செயற்கை நுண்ணறிவு மென்பொருள் தொழில்நுட்பம் (Artificial Intelligence Software) வாயிலாக காசநோயை கண்டறிய அதி நவீன புதிய சேவைகள் ரூபாய் 1.87 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைந்திடும் வகையில் இந்தியாவிலேயே முதன்முறையாக, அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மற்றும் 10 நடமாடும் நுண்கதிர் (X–RAY) வாகனங்களில் எடுக்கப்படும் அனைத்து X–RAY மற்றும் CT–CHEST படங்களும் ஒருங்கிணைத்து, செயற்கை நுண்ணறிவு மென்பொருள் தொழில்நுட்பம் (Artificial Intelligence Software) மூலம் காசநோயை உடனுக்கு உடன் கண்டறிந்து விரைவான சிகிச்சை வழங்க வழிவகை செய்யும் அதி நவீன புதிய சேவை ரூபாய் 1.87 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

# VIII – மகப்பேறு மருத்துவ சேவைகள்

**60. தாய்சேய் நல சேவைகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக சென்னை ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் தாய் சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு (Centre of Excellence) கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 84.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தாய்சேய் நல சேவையை மேலும் வலுப்படுத்தும் விதமாக சென்னை ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை ஆகிய மூன்று அரசு மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வரும் தாய் சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு (Centre of Excellence) கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 84.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**61. ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதற்காக பட்டுக்கோட்டை, கம்பம், சிதம்பரம் அரசு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் தலா ரூபாய் 12 கோடி வீதம் ரூபாய் 36 கோடி செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் 126 விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை, தேனி மாவட்டம் – கம்பம், மற்றும் கடலூர் மாவட்டம் – சிதம்பரம் ஆகிய 3 அரசு மருத்துவமனைகளுக்கு தலா ரூபாய் 12 கோடி வீதம் புதிய கட்டடங்கள் ரூபாய் 36 கோடி செலவில் கட்டப்படும்.

**62. தருமபுரி மாவட்டம் – பென்னாகரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் தாய் சேய் நல பிரிவு தலா ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – லால்குடி அரசு மருத்துவமனையில் ரூபாய் 8 கோடி செலவிலும் மருத்துவ கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூபாய் 32 கோடி செலவில் நிறுவப்படும்.**

தருமபுரி மாவட்டம் – பென்னாகரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் தாய் சேய் நல பிரிவு தலா ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – லால்குடி அரசு மருத்துவமனையில் ரூபாய் 8 கோடி செலவிலும் மருத்துவ கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூபாய் 32 கோடி செலவில் நிறுவப்படும்.

**63. சென்னை தண்டையார்பேட்டை, சைதாப்பேட்டை அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மையம் (CEmONC) மருத்துவ கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 24 கோடி செலவில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

சென்னை பெருநகர மாநகராட்சியில் தண்டையார்பேட்டை மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகளில், ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மையங்கள் (CEmONC) தலா ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மருத்துவ கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**64. தஞ்சாவூர், இராசா மிராசுதார் மருத்துவமனை மற்றும் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு நலப் பிரிவின் மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், தாய்சேய் நலப் பிரிவுக்கான கட்டடம், ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்ட மக்களுக்கு சிறப்பான தாய் சேய் நல சேவைகள் வழங்கும் பொருட்டு, தஞ்சாவூர், இராசா மிராசுதார் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு நலப்பிரிவின் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய தரை தளத்துடன் கூடிய 2 அடுக்கு கட்டடம் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்த கூடுதலாக 4 மற்றும் 5வது மேல்தளங்கள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**65. சிறப்பான தாய் சேய் நல சேவைகள் வழங்கும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்– துறையூர் மற்றும் திருப்பூர் மாவட்டம்– அவினாசி அரசு மருத்துவமனைகளில், தலா ரூபாய் 6 கோடி வீதம், தாய்சேய் நலப்பிரிவு மருத்துவ கட்டமைப்பு வசதிகளுடன் தாய் சேய் நலப் பிரிவுக்கான கட்டடம், ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில், மகப்பேறு தாய்மார்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான தாய் சேய் நல சேவைகள் வழங்கும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் மருத்துவமனை மற்றும் திருப்பூர் மாவட்டம் அவினாசி அரசு மருத்துவமனைகளில், தலா ரூபாய் 6 கோடி வீதம் கட்டமைப்பு வசதிகளுடன் தாய் சேய் நலப் பிரிவுக்கான கட்டடம், ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**66. தமிழ்நாட்டில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு பின் ஏற்படும் உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் நோக்கில் 385 வட்டார அளவிலான சுகாதார நிலையங்கள் மற்றும் 38 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சக்சன் கேனுலா (Suction Cannula) எனும் இரத்த உறிஞ்சி குழாய் உபகரணங்கள் ரூபாய் 63.45 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

மகப்பேறு மரண விகிதத்தை குறைக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனை மேலும் குறைக்க, கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு பின் ஏற்படும் உதிரப்போக்கை (Atonic PPH) கட்டுப்படுத்த 385 வட்டாரம் மற்றும் 38 நகர்புற சுகாதார நிலையங்களுக்கு சக்சன் கேனுலா (Suction Cannula) எனும் இரத்த உறிஞ்சி குழாய் உபகரணம் ரூபாய் 63.45 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

# IX – பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள்

**67. மதுரை இராஜாஜி அரசு மருத்துவனையில் இயங்கும் குழந்தைகள் நல ஆராய்ச்சி மையம் பிரத்தியேகமாக 400 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையமாக (Centre of Excellence) ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் இளம் சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகளை மேம்படுத்தும் விதமாக, மதுரை இராஜாஜி அரசு மருத்துவனையில் இயங்கும் குழந்தைகள் நல ஆராய்ச்சி மையம் 400 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையமாக (Centre of Excellence) ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**68. தமிழ்நாட்டில் பச்சிளங்குழந்தை இறப்புகளை குறைப்பதற்கு 150 பச்சிளங்குழந்தை வென்டிலேட்டர் (Neonatal Ventilator) கருவிகள் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 74 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் பச்சிளங் குழந்தை இறப்புகளை குறைப்பதற்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் 150 பச்சிளங் குழந்தை வென்டிலேட்டர் (Neonatal Ventilator) கருவிகள் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள 74 சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கு வழங்கப்படும்.

**69. தமிழ்நாட்டில் பச்சிளங்குழந்தை இறப்புகளை குறைப்பதற்கு 74 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவுகளுக்கும், 146 பச்சிளங் குழந்தை நிலைப்படுத்தும் பிரிவுகளுக்கும் உயிர்காக்கும் அதிநவீன உபகரணங்கள் ரூபாய் 9.37 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் சிசு மரண விகிதத்தை மேலும் குறைப்பதற்கும், பச்சிளங் குழந்தை இறப்புகளை குறைப்பதற்கும், 74 சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகள் (SNCU) மற்றும் 146 பச்சிளங் குழந்தை நிலைப்படுத்தும் பிரிவுகளுக்கும் (NBSU) உயிர்காக்கும் அதிநவீன உபகரணங்கள் ரூபாய் 9.37 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**70. கோயம்புத்தூர் மாவட்டம்–மேட்டுப்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–திருவரங்கம் அரசு மருத்துவமனையிலும் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் 3 சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் ரூபாய் 2.26 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருவரங்கம் அரசு மருத்துவமனையிலும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மிக ஆபத்தான நிலையில் நோயுற்ற மற்றும் எடை குறைவான / குறைமாத குழந்தைகளின் உயிர்காக்கும் பொருட்டு, சிறப்பு பச்சிளங் குழந்தை சிகிச்சை மையங்கள் ரூபாய் 2.26 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**71. கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இளம் சிசு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவை மேம்படுத்த நவீன உபகரணங்கள் ரூபாய் 2.17 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசரகால சிகிச்சைகளை மேம்படுத்தவும், இளம் சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகளை மேம்படுத்தவும், நவீன உபகரணங்கள் ரூபாய் 2.17 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

# X – புற்றுநோய் மருத்துவ சேவைகள்

## 72. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 46 கோடி மதிப்பீட்டில் புதிய புற்று நோய் சிகிச்சை பிரிவு உருவாக்கப்படும்.

தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய புற்று நோய் சிகிச்சை பிரிவு கட்டடம் அமைத்து அதற்கென உயர்தர உபகரணங்கள் வழங்கப்படும்.

## 73. இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் புற்றுநோயியல் பிரிவிற்கு அதிநவீன உபகரணங்கள் ரூபாய் 21.09 கோடியில் வழங்கப்படும்.

இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் புற்றுநோயியல் பிரிவில் சிகிச்சைகளை மேம்படுத்த, லீனியர் ஆக்ஸிலேட்டர் (Linear accelerator), ரோபோட்டிக் சிகிச்சை கருவி (Robotic 6D couch for performing advanved IGRT/SBRT treatment) உள்ளிட்ட உயர் சிகிச்சை கருவிகள் ரூபாய் 21.09 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**74. 2030–ஆம் ஆண்டிற்குள் புற்றுநோய்களால் ஏற்படும் இறப்பினைத் தவிர்க்கவும் அவர்களின் வாழ்வை மேம்படுத்தவும், தற்போதைய புற்றுநோய் பராமரிப்புச் சேவைகளை மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து, மறுசீரமைப்பதற்காக ரூபாய் 19.21 கோடி செலவிடப்படும்.**

விரிவான புற்றுநோய் கண்டறியும் உத்திகளைக் கொண்டு, மூன்றில் இரண்டு பங்கு ஆரம்பநிலை புற்றுநோய்களை (நிலை I மற்றும் II) கண்டறிந்து, தகுந்த சிகிச்சை அளிப்பதன் மூலம், தமிழ்நாட்டில் 2030 ஆம் ஆண்டிற்குள் புற்றுநோய்களால் முன்கூட்டியே ஏற்படும் இறப்பினை (Pre–mature Mortality) தவிர்க்கவும் புற்றுநோயாளர்களின் வாழ்வை மேம்படுத்தவும், அனைத்து மாவட்டங்களிலும் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்துடன் தற்போதைய புற்றுநோய் பராமரிப்புச் சேவைகளை ஒருங்கிணைத்து, மறுசீரமைப்பதற்காக ரூபாய் 19.21 கோடி செலவிடப்படும்.

**75. கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவ சிகிச்சையை மேம்படுத்திட ரூபாய் 14 கோடி செலவில் லினாக் (L I N A C) கருவிகள் வழங்கப்படும்.**

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவ சிகிச்சையை மேம்படுத்திட ரூபாய் 14 கோடி செலவில் லினாக் (L I N A C) கருவிகள் வழங்கப்படும்.

**76. சென்னை, அரசு கஸ்தூரிபாய் மகப்பேறு மருத்துவமனையில் கருப்பை வாய் புற்றுநோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் விதமாக ஹெச்.பி.வி – டி.என்.ஏ பரிசோதனைக்கான நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வகம் ரூபாய் 9.07 கோடி செலவில் நிறுவப்படும்.**

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கருப்பை வாய் புற்றுநோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறிய மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சென்னை, அரசு கஸ்தூரிபா மகப்பேறு மருத்துவமனையில் ஹெச்.பி.வி – டி.என்.ஏ பரிசோதனை செய்ய, நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வகம் ரூபாய் 9.07 கோடி செலவில் நிறுவப்படும்.

**77. தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டமாக சென்னை மாவட்டத்தில் 12–14 வயதுடைய அனைத்து வளரிளம் பெண்களுக்கு ரூபாய் 7.15 கோடி செலவில் ஹெச்.பி.வி. (H u m a n Papilloma Virus) தடுப்பூசி செலுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டமாக சென்னை மாவட்டத்தில் 12–14 வயதிற்குட்பட்ட அனைத்து வளரிளம் பெண்களுக்கு ஹெச்.பி.வி (Human Papilloma Virus) வைரஸால் ஏற்படும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுக்கும் பொருட்டு, ஹெச்.பி.வி. தடுப்பூசி ரூபாய் 7.15 கோடி செலவில் செலுத்தப்படும்.

## 78. செங்கல்பட்டு, நீலகிரி, மயிலாடுதுறை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள் ரூபாய் 60.17 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 20 மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. புகையிலைப் பொருட்கள் உபயோகத்தினால் ஏற்படும் தீமைகள் மற்றும் புகையிலைப் பொருட்கள் தடுப்புச்சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செங்கல்பட்டு, நீலகிரி, மயிலாடுதுறை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய 10 மாவட்டங்களில் ரூபாய் 60.17 இலட்சம் மதிப்பீட்டில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**79. புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தை பருவத்தினர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திடும் விதமாக மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைப் பருவ புற்றுநோய் பராமரிப்பு பிரிவு ஏற்படுத்தி, சேவைகள் வழங்கப்படும்.**

குழந்தைப் பருவ புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடும் வகையில் குழந்தைப் பருவ புற்றுநோய் கண்டறிதல், சிகிச்சை மற்றும் பராமரிப்பில் உள்ள இடைவெளியை குறைப்பதற்காகவும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைப் பருவ புற்றுநோய் பராமரிப்பு பிரிவு ஏற்படுத்தி, மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

# XI – சிறப்பு மருத்துவ சேவைகள்

**80. இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு குருத்தணு பதிவேடு (Government Stem Cell Registry) சென்னை அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் இயங்கி வரும் பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையத்தில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.**

இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு குருத்தணு பதிவேடு (Government Stem Cell Registry) சென்னை எழும்பூர் அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் இயங்கி வரும் பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையத்தில் உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

**81. தமிழ்நாட்டில் முதல்முறையாக பிறவி இதயநோய் பதிவேடு (CHD Registry) உருவாக்கவும் மற்றும் இளம் சிசு பிறவி இதய நோய் (Congenital Heart Disease) கண்டறிவதை வலுப்படுத்த நவீன உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் ரூபாய் 22.43 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் முதல்முறையாக பிறவி இதயநோய் பதிவேடு (CHD Registry) உருவாக்கவும், இளம் சிசு பிறவி இதய நோய் (Congenital Heart Disease) கண்டறிவதை வலுப்படுத்தவும் நவீன உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் ரூபாய் 22.43 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 82. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வைரல் ஹெப்படைடிஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் வட்டார அளவில் பரிசோதனை முகாம் ரூபாய் 10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தேசிய வைரல் ஹெப்படைடிஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ள நபர்களுக்கு (High Risk Group) ஹெப்படைடிஸ் பி மற்றும் சி வைரஸை கண்டறிய வட்டார அளவிலான பரிசோதனை முகாம் ரூபாய் 10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**83. ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும், மருத்துக் கல்லூரிகள் அல்லாத மாவட்டங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் உரிய சிகிச்சைகள் வழங்கிடவும், கூடுதலாக ஹீமோபிலியா நோய்த்தடுப்பு சிகிச்சைகள் ஒருங்கிணைந்த சிகிச்சை மையங்களில் (Integrated Centre for Haemophilia and Haemoglobinopathies) ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும், மருத்துக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் உரிய சிகிச்சைகள் வழங்கிடவும், ஹீமோபிலியா நோய்த் தடுப்பு சிசிச்சைகள் ஒருங்கிணைந்த சிகிச்சை மையங்களில் (Integrated Centre for Haemophilia and Haemoglobinopathies) வழங்கவும் ரூபாய் 10 கோடி செலவிடப்படும்.

**84. மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபுசார் பிற அரியவகை நோய்களுக்கான மருத்துவத் துறையை மூன்று ஒப்புயர்வு மையங்களாக சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்திட முதற்கட்டமாக ரூபாய் 8.19 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும்.**

மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபுசார் பிற அரியவகை நோய்கள் உடையோரை கண்டறிந்து, அவர்களது வாழ்க்கைத் திறனையும், செயல்திறனையும் வலுப்படுத்தும் விதமாக இந்த உயர்நிலை மரபியல் மூலக் கூறுகளின் அடிப்படையிலான மரபியல்சார் ஆய்வகங்கள் (Molecular Genetic Lab) செயல்படும். பச்சிளம் குழந்தைகள் தொடங்கி பல்வேறு வயதினர்களை பாதிக்கக்கூடிய முக்கிய நோய்களான தலசிமியா, சிக்கல் செல் அனிமியா, ஹீமோபிலியா, தைராய்டு மற்றும் அட்ரினல் சுரப்பிகளின் பிறவி குறைபாடுகள் (CH & CAH), டுசென் தசைசிதைவு (DMD), தண்டுவட தசைசிதைவு மற்றும் பிற

குரோமோசோம் சார்ந்த மரபியல் நோய்களை கண்டறிவதற்கு மிகச் சிறந்த மையங்களாக செயல்படும். மரபியல் மற்றும் அரிய வகை நோய்களுக்கான சேவைகள் மற்றும் அமைப்பு வசதிகள் தற்போது சமுதாயத்தில் இல்லாதவொரு சூழ்நிலையில் சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர், மதுரை இராஜாஜி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்படவிருக்கும் இவ்வொப்புயர்வு மையங்கள் தமிழ்நாட்டில் மண்டல அளவில் பயனாளிகளுக்கு பெரும்பயன் அளிக்கும் வகையில் முதற்கட்டமாக ரூபாய் 8.19 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும்.

**85. தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் வட்டார அளவில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் வளரிளம் பருவத்தினருக்கான மாதிரி சிகிச்சை மற்றும் மேலாண்மை மையங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தினருக்கான சுகாதார சேவைகளை மேம்படுத்தும் வகையில், 30 மாவட்டங்களில் ஒரு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் வளரிளம் பருவத்தினருக்கான மாதிரி சிகிச்சை மற்றும் மேலாண்மை மையங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**86. சென்னை எழும்பூர் அரசு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் சிறார் மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை ஆகியவற்றில் கட்டமைப்பு உபகரணங்களுடன் ரூபாய் 5 கோடி செலவில்"கருத்தரிப்பு மையங்கள்" (Infertility Clinic) நிறுவப்படும்.**

அரசு மகப்பேறு மகளிர் மற்றும் தாய்சேய் நல மருத்துவமனை எழும்பூர் மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய "கருத்தரிப்பு மையங்கள்" (Infertility Clinic) ரூபாய் 5 கோடி செலவில் நிறுவப்படும்.

**87. தமிழ்நாட்டில் முதன்முறையாக 420 வட்டார அளவிலான பிறவிக் குறைபாடுகள் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்கள் ரூபாய் 4.20 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.**

தமிழ்நாட்டில் முதன்முறையாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறையுடன் இணைந்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகள் மற்றும் வளர்ச்சி குறைபாடுகளை கண்டறிந்து, தகுந்த சிகிச்சைகள் அளிக்கும் வகையில் 420 வட்டார அளவிலான பிறவிக் குறைபாடுகள் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்கள் ரூபாய் 4.2 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

**88. கோயம்புத்தூர், மதுரை, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டண மருத்துவ படுக்கை தொகுதிகள் (Pay Wards) ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கோயம்புத்தூர், மதுரை, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டண மருத்துவ படுக்கை தொகுதிகள் (Pay Wards) ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 89. கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நடமாடும் உணவு பகுப்பாய்வு கூடம் (Food Safety on Wheels) ரூபாய் 1.92 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 6 உணவு பகுப்பாய்வு கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சென்னை மற்றும் மதுரையில் உள்ள உணவு பகுப்பாய்வு கூடங்களில், நடமாடும் உணவு பகுப்பாய்வு கூடங்கள் உள்ளன. கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உணவு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள உணவு பகுப்பாய்வு கூடங்களில் புதிதாக நடமாடும் உணவு பகுப்பாய்வு கூட (Food Safety on Wheels) வசதிகள் ரூபாய் 1.92 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**90. கருவுற்ற தாய்மார்களிடையே ஹீமோகுளோபினோபதீஸ் கோளாறுகளை கண்டறிந்து மரபணு ஆலோசனை வழங்கும் திட்டம் மேலும் 12 பழங்குடியினர் வசிக்கும் வட்டாரங்களில் ரூபாய் 1.68 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.**

தமிழ்நாட்டில், திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், கொடைக்கானல் மற்றும் பழனி, ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கன்னியாகுமரி மாவட்டம் – திருவட்டார், மேல்புறம் மற்றும் தோவாளை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர் மற்றும் உப்பிலியாபுரம், திருப்பத்தூர் மாவட்டம் – மாதனூர் மற்றும் நரியம்பட்டு ஆகிய 12 பழங்குடியினர் வசிக்கும் வட்டாரங்களில் கருவுற்ற தாய்மார்களிடையே ஹீமோகுளோபினோபதீஸ் (தலசீமியா மற்றும் சிக்கில்செல் டிரெய்ட்–Trait/நோய்) உள்ளதா என்பதை கண்டறிந்து, அவர்கள் கருவிலிருக்கும் குழந்தைக்கு நோய் பாதிப்பு இருக்கிறதா என்று அறிந்து, மரபணு ஆலோசனை வழங்கும் திட்டம் தலா ரூபாய் 14 இலட்சம் வீதம், மொத்தம் ரூபாய் 1.68 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

**91. தமிழ்நாட்டில் முதன்முறையாக மாதிரி அடிப்படையில், நீரிழிவு நோய் மற்றும் குருதிநாள பாதிப்புகளால் ஏற்படும் கால் பாத பாதிப்புக்களை கண்டறிந்து ஆரம்ப நிலை சிகிச்சையின் மூலம் கால் இழப்புக்களை குறைக்கும் திட்டம் (Foot Clinic / Stop Amputations) ரூபாய் 1.05 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் முதன்முறையாக மாதிரி அடிப்படையில், கும்பகோணம் மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தாலுக்கா மருத்துவமனைகளில் நீரிழிவு நோய் மற்றும் குருதிநாள பாதிப்புகளால் ஏற்படும் கால் பாத பாதிப்புக்களை கண்டறிந்து ஆரம்ப நிலையில் கால் இழப்புக்களை குறைக்கும் திட்டம் (Foot Clinic / Stop Amputations) ரூபாய் 1.05 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**92. "திருநங்கைகள்" நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் அச்சேவைகள் மேலும் மேம்படுத்திட திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "ஆலோசனை பிரிவு" (Gender Guidance Clinic) ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

"திருநங்கைகள்" நலனுக்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வரும் நிலையில், இவர்களுக்கான சேவையை மேலும் மேம்படுத்த திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் "ஆலோசனை பிரிவு" (Gender Guidance Clinic) ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**93. பிறவி இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப கால இதய அறுவை சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவத் துறை மற்றும் அப்போலோ குழந்தைகள் மருத்துவ மனையுடன் இணைந்து, இதய அறுவை சிகிச்சை அளிப்பதற்கும் மற்றும் 6 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இதய மருத்துவக் குழுவினர்க்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்.**

பிறவி இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப கால இதய அறுவை சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவத் துறை, அப்போலோ குழந்தைகள் மருத்துவமனையுடன் இணைந்து, இதய அறுவை சிகிச்சை அளிப்பதற்கும், மதுரை, திருநெல்வேலி, வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இதய மருத்துவக் குழுவினர்க்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்.

**94. சென்னை இராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் உள்ள தண்டுவட அறுவை சிகிச்சை பிரிவில் மனிதவளம் வலுப்படுத்தப்படும்.**

சென்னை, இராஜீவ் காந்தி மருத்துவமனையில் தற்போது உள்ள தண்டுவட அறுவை சிகிச்சை பிரிவு வலுப்படுத்தப்படும்.

## 95. ஹீமோபிலியா தொடர் சிகிச்சை தினப் பராமரிப்பு சேவை (Day Care Centre) அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் விரிவுபடுத்தப்படும்.

தற்போது 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஹீமோபிலியா தொடர் சிகிச்சை தினப் பராமரிப்பு சேவை வழங்கப்படுகிறது. எஞ்சிய 14 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இச்சேவை விரிவுப்படுத்தப்படும். இதனால், ஏற்கனவே பயன்பெறும் 2751 நபர்களுக்கும் மற்றும் புதிதாக கண்டுபிடிக்கப்படும் நோயாளிகளுக்கும் தேவையான அனைத்து உயர்தர மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். இச்சிகிச்சைக்காக வரும் குழந்தைகள் மற்றும் நோயாளிகளுக்கும், அவர்களுடன் வருபவர்களுக்கும் சிறப்புப் பயண வசதி மற்றும் தங்கும் வசதி செய்து தரப்படும்.

# XII – நவீன மருத்துவ உபகரணங்கள்

## 96. நவீன அல்ட்ரா சவுண்ட் கருவிகள் (USG) ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 63.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தாய்சேய் நல சேவைகள் மற்றும் பிற சேவைகள் மேம்படுத்தும் விதமாக 387 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள 116 சீமாங்க் மையங்களுக்கு நவீன வண்ண அல்ட்ரா சவுண்ட் கருவிகள் (USG) ரூபாய் 63.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**97. நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் நலனுக்காக "தமிழ்நாடு ஒருங்கிணைந்த சிறுநீரக பராமரிப்பு திட்டத்தை" மேம்படுத்தும் வகையில் 100 புதிய இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் (Dialysis Machine) மற்றும் சிறுநீரக செயலிழப்பு சிகிச்சைக்காக நவீன உபகரணங்கள் ரூபாய் 23.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு ஒருங்கிணைந்த சிறுநீரக பராமரிப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 6.5 கோடி செலவில் கூடுதலாக 100 புதிய இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களும், ரூபாய் 2.15 கோடி செலவில் எரித்ரோபாய்ட்டின் என்ற சிறப்பு ஊசி மருந்துகளும், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள சிறுநீரகவியல் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை பிரிவில் வழங்கப்படும் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை சேவைகளை மேலும் வலுப்படுத்த ரூபாய் 15 கோடி செலவில் கூடுதல் மருத்துவ உபகரணங்களும் என மொத்தம் ரூபாய் 23.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**98. தமிழ்நாட்டில் 30 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் பொது அறுவை சிகிச்சையை மேம்படுத்த நவீன உபகரணங்கள் (Diagnostic and Operative Laparoscope) ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் 30 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் பொது அறுவை சிகிச்சையை மேம்படுத்த அதிநவீன நுண்துளை அறுவை சிகிச்சை கருவி (Diagnostic and Operative Laparoscope) தலா ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**99. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் (TAEI) கீழ், 13 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் இருதய பிரிவினை மேம்படுத்தும் விதமாக, மிட் ரேஞ்ச் எக்கோ கருவி ரூபாய் 5.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் (T A E I) கீழ், சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி, மருத்துவமனை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சேலம், விழுப்புரம், தூத்துக்குடி, திருச்சி, வேலூர், திருநெல்வேலி, மதுரை, தேனி மற்றும் செங்கல்பட்டு ஆகிய 13 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இயங்கும் இருதய பிரிவினை மேம்படுத்த, மிட் ரேஞ்ச் எக்கோ கருவி (Mid Range Echo) ரூபாய் 5.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**100. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் (TAEI) கீழ், 15 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் கேத் லேப் பிரிவை மேம்படுத்த பவர் இன்ஜெக்டர் (Power Injector) என்னும் நவீன உபகரணங்கள், ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் (TAEI) கீழ், 15 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இயங்கும் கேத் லேப் பிரிவை மேம்படுத்த பவர் இன்ஜெக்டர் (Power Injector) என்னும் நவீன உபகரணங்கள், ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**101. தமிழ்நாட்டில் கர்ப்பக்கால உயர் இரத்த அழுத்த நோய் அதிகமுள்ள 11 மாவட்டங்களில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களின் இரத்த அழுத்தத்தை கண்டறிய நவீன இரத்த அழுத்தம் கண்டறியும் கருவி (Digital Blood Pressure Apparatus) ரூபாய் 2.77 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் கர்ப்பக்கால உயர் இரத்த அழுத்த நோய் அதிகமுள்ள திருச்சி, தூத்துக்குடி, கோவில்பட்டி, விருதுநகர், சிவகாசி, கரூர், இராணிப்பேட்டை, ஈரோடு, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கு கர்ப்பிணித் தாய்மார்களின் இரத்த அழுத்தத்தை கண்டறிய நவீன இரத்த அழுத்தம் கண்டறியும் கருவி (Digital Blood Pressure Apparatus) ரூபாய் 2.77 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**102. தமிழ்நாட்டில் உள்ள சென்னை ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், கோயம்புத்தூர்,மதுரை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், எலிக்கொல்லி மருந்தினை உட்கொள்வதால் ஏற்படும் உடல் பாதிப்புகள் மற்றும் இறப்புகளை குறைக்கும் நோக்கில், அதிநவீன இரத்த சுத்திகரிப்பு உபகரணம் (Plasma Pheresis Machine) ரூபாய் 1.80 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள ஸ்டான்லி, கீழ்பாக்கம், கோயம்புத்தூர், மதுரை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், எலிக்கொல்லி மருந்தினை உட்கொள்வதால் ஏற்படும் உடல் பாதிப்புகள் மற்றும் இறப்புகளை குறைக்கும் நோக்கில், அதிநவீன இரத்த சுத்திகரிப்பு உபகரணம் (Plasma Pheresis Machine) தலா ரூபாய் 30 இலட்சம் வீதம், மொத்தம் ரூபாய் 1.8 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**103. காது, மூக்கு, தொண்டை சிகிச்சைக்கான நவீன உயர் தொழில்நுட்ப உள்நோக்கு அறுவை சிகிச்சை கருவிகள் (Functional Endoscopic Sinus Surgery (FESS) Equipment) 7 அரசு மருத்துவமனைகளுக்கும், செவித்திறன் கண்டறியும் நவீன உபகரணங்கள் 9 மாவட்ட மருத்துவமனைகளுக்கும், ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் காது, மூக்கு, தொண்டை சேவைகளை வலுப்படுத்தும் வகையில், ஜெயங்கொண்டம், திருக்கோவிலூர், வேதாரண்யம், அறந்தாங்கி, காரைக்குடி, மன்னார்குடி, வாலாஜா ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் உயர்தர சேவைகளை பொதுமக்களுக்கு வழங்க, நவீன உயர் தொழில்நுட்ப உள்நோக்கு அறுவை சிகிச்சை கருவிகள் [Functional Endoscopic Sinus Surgery (FESS) Equipment] ரூபாய் 84 இலட்சம் மதிப்பீட்டிலும், பொள்ளாச்சி, பெரியகுளம், இராசிபுரம், வேதாரண்யம், மேலப்பாளையம், உசிலம்பட்டி, மேட்டூர், செய்யார் மற்றும் கடலூர் ஆகிய 9 அரசு மருத்துவமனைகளுக்கு செவித்திறன் கண்டறியும் நவீன உபகரணங்கள் ரூபாய் 60.5 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

**104. திருவண்ணாமலை மற்றும் அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைகளுக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் லேப்ராஸ்கோப்பி கருவிகள் வழங்கப்படும்.**

திருவண்ணாமலை, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவில்பட்டி அரசு மருத்துவமனை ஆகியவைகளுக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நவீன லேப்ராஸ்கோப் கருவிகள் வழங்கப்படும்.

# XIII – "இ" – சுகாதார சேவைகள்

**105. தகவல் மேலாண்மை திட்டத்தை வலுப்படுத்தும் விதமாக 17,077 சுகாதார நிலையங்களில் கம்பி இல்லா இணைய சேவை (Wi–Fi Facility) ரூபாய் 46 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

தகவல் மேலாண்மை திட்டத்தை வலுப்படுத்தும் விதமாக 17,077 சுகாதார நிலையங்களில் கம்பி இல்லா இணைய சேவை (Wi–Fi Facility) ரூபாய் 46 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**106. மக்கள் நலப் பதிவேட்டினை மின்னணு மையமாக்கும் பொருட்டு 20,000 இணையவழி வசதியுடன் கூடிய மின்னணு தொலைதொடர்பு கருவிகள் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ், சுகாதார பெண் தன்னார்வலர்கள், சுகாதார களப்பணியாளர்கள் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் சுகாதாரத் தரவுகளை ஒருங்கிணைத்து நல சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு மக்கள் நலப்பதிவேட்டினை மின்னணுமையமாக்கும் பொருட்டு 20,000 இணைய வழி வசதியுடன் கூடிய மின்னணு தொலை தொடர்பு கருவிகள் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் பணியாற்றும், சுகாதார பெண் தன்னார்வலர்கள், சுகாதார களப்பணியாளர்கள் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**107. உலக வங்கி திட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குகளின்படி தாய் சேய் நலப் பணிகளின் புள்ளி விவரங்களை பகுதி சுகாதார செவிலியர்கள் மூலம் உடனுக்குடன் இணைய வழி பதிவேற்றம் செய்வதற்கு ரூபாய் 19.86 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் 1,806 ஊரக சுகாதார நிலையங்களுக்கு தலா ஒரு மடிக்கணினி வழங்கப்படும்.**

உலக வங்கி திட்டத்தின் வரையறுக்கபட்ட இலக்குகளின் படி தாய் சேய் நல பணிகளின் புள்ளி விவரங்களை பகுதி சுகாதார செவிலியர்கள் மூலம் உடனுக்குடன் இணைய வழி பதிவேற்றம் செய்வதற்கு 19.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் 1806 ஊரக சுகாதார நிலையங்களுக்கு தலா ஒரு மடிக்கணினி வழங்கப்படும்.

**108. சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் மின்னணு சுகாதார இயக்குநரகம் (e–Health Directorate) ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

டி.எம்.எஸ். வளாகத்தில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் மின்னணு மருத்துவ சேவைகளை துரிதப்படுத்தவும், கண்காணிக்கவும் மின்னணு சுகாதார இயக்குநரகம் (e–Health Directorate) ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**109. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் சுகாதார விவரக் குறிப்பினை மக்கள் நல பதிவேட்டில் (PHR) இணைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 3 கோடி செலவிடப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் உடல்நலம் காக்க சுகாதார விவரக் குறிப்பினை மக்கள் நல பதிவேட்டில் (PHR) இணைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 3 கோடி செலவிடப்படும்.

**110. குருதி தேவைப்படும் நோயாளிகளுக்கு எளிதில் குருதி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, தொடர் தன்னார்வ குருதிக் கொடையாளர்களின் விவரங்களை பதிவு செய்ய, கணினி மயமாக்கப்பட்ட பதிவேடு மற்றும் செயலி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் தன்னார்வ குருதி கொடையாளர்களின் மூலமாக ஆண்டுதோறும் எட்டு இலட்சம் குருதி அலகுகள் சேர்க்கப்பட்டு மக்களின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. ஐந்து முறைக்கு மேல் தானம் செய்த கொடையாளர்களின் விபரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணினிமயமாக்கவும், தொடர் குருதி கொடையாளர்களின் விவரம் மற்றும் அடுத்த குருதி தானத்திற்கு தகுதியுள்ள நாள் விவரம் குறுஞ்செய்தியில் எளிதில் அறிந்து கொள்ள கைப்பேசி செயலி உருவாக்குவதும் அவசியம். எனவே, குருதி தேவைப்படும் நோயாளிகளுக்கு எளிதில் குருதி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, தொடர் தன்னார்வ குருதிக் கொடையாளர்களின் விவரங்களை பதிவு செய்ய, கணினி மயமாக்கப்பட்ட பதிவேடு மற்றும் செயலி ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

## 111. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொலை மருத்துவ சேவை (Telemedicine) துவங்கப்படும்.

அதி நவீன மருத்துவ சேவைகளுக்காகவும், சிகிச்சைக்காகவும், நோய்குறியியல் தகவல் பரிமாற்றத்திற்காகவும், மருத்துவ சிறப்பு சிகிச்சைக்காகவும், புதிய கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்துகொள்ளவும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்பு சிகிச்சை தகவல் பரிமாற்றம் சேவை பொது மக்கள் நலனுக்காக சிறப்பு பிரிவு ஏற்பாடு செய்யப்படும். இதற்கு வேண்டிய அனைத்து உட்கட்டமைப்பு, ஒலி–ஒளி மற்றும் காணொலி திரை, தகவல் தொழில்நுட்பம், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ளதால், அரசிற்கு கூடுதல் செலவினம் ஏதுமில்லாமல் துவங்கப்படும்.

# XIV – மன நல மருத்துவம்

**112. நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி, மன நலம் காப்பதற்கான மாநில அளவிலான ஒப்புயர்வு மையம், சென்னை அரசு மன நல மருத்துவமனையில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

சென்னை மன நல காப்பகம் 1,800 படுக்கை வசதிகளுடன் மன நல நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது. மன நலம் மற்றும் நரம்புசார் மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான மாநில அளவிலான தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் நிறுவனம் (TNIMHANS) என்ற ஒப்புயர்வு மையம், சென்னை அரசு மனநல மருத்துவமனையில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**113. மன நலம் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காக கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சேலம் மாவட்டங்களில் அவசரசிகிச்சை மீட்பு மையங்கள் (ECRC) ரூபாய் 1.60 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.**

மன நலம் பாதிக்கப்பட்டு சாலைகளில் அலைந்து திரிபவர்களை மீட்டு சிகிச்சை அளித்து, மறுவாழ்வு மற்றும் அவர்கள் குடும்பத்துடன் ஒருங்கிணைக்க வேலூர், விழுப்புரம், தேனி, திருவண்ணாமலை, திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் சென்னை ஆகிய 7 மாவட்டங்களில் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் நிறுவப்பட்டு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சேலம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா 50 படுக்கைகளுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கிட அவசர சிகிச்சை மீட்பு மையங்கள் ரூபாய் 1.60 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

**114. அதிகரித்து வரும் தற்கொலை மரணங்களை குறைக்கும் நோக்கில் தமிழ்நாட்டில் உயிர்க்கொல்லியான எலிகொல்லி பசை விற்பனை தடை செய்ய "சிறப்பு கவன திட்டம்" செயல்படுத்த வழிவகை செய்யப்படும்.**

அதிகரித்து வரும் தற்கொலை மரணங்களை இந்த அரசு மிகுந்த கவனத்துடனும் அக்கறையோடும் அணுகுகின்றது. இந்த மரணங்களை குறைப்பதற்கான "சிறப்புத் திட்டம்" மற்றும் விழிப்புணர்வு இயக்கம் மேற்கொள்ளப்பட உள்ளது. பெட்டி கடைகள் முதல் அனைத்து கடைகளிலும் மிக எளிதில் விற்பனைக்கு வரும் உயிர்க்கொல்லியான எலிகொல்லி பசை விற்பனையை தடை செய்ய மற்ற அரசு துறைகளுடன் இணைந்து வழிவகை செய்யப்படும்.

# XV – மருத்துவமனை மேலாண்மை

**115. தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் தூய்மையை காக்கும் பொருட்டு "நம் மருத்துவமனை–மகத்தான மருத்துவமனை" என்ற திட்டத்தினை தொடர்ந்து செயலாற்றிட ரூபாய் 32.77 கோடி செலவிடப்படும்.**

அரசு மருத்துவமனைகளை தூய்மையுடன் பராமரிக்க, "நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை" என்ற குறிக்கோளுடன் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் "மருத்துவமனைகள் தூய்மை இயக்கம்" "ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் 30–ஆம் தேதி வரை" நடைபெற்றுவருகிறது. அரசு மருத்துவ மனைகளை தூய்மையாகவும், சுத்தமாகவும் வருடம் முழுவதும் பராமரிக்க," 'நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை திட்டம்' ஆண்டு முழுவதும் ரூபாய் 32.77 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 116. செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், மயிலாடுதுறை மற்றும் தென்காசி மாவட்டங்களில் 5 புதிய மாவட்ட மருந்து கிடங்குகள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் நிறுவப்படும்.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால், கொள்முதல் செய்யப்படும் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்கள், மாவட்ட மருந்துகிடங்குகளில் சேமித்து வைத்து, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றது. தற்போது, 32 மருந்து கிடங்குகள் உள்ளன. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் தங்கு தடையின்றி அனைத்து மருந்துகளும் வழங்குவதற்கு ஏதுவாக 5 புதிய மருந்து கிடங்குகள் தலா ரூபாய் 6 கோடி வீதம் மொத்தம் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் 5 புதிய மாவட்ட மருந்து கிடங்குகள் நிறுவப்படும்.

## 117. குழந்தைகள் மற்றும் இளம் சிசு சிகிச்சை மையங்கள் மஸ்கான் (MusQan) தரச் சான்றிதழ் பெற, 40 மையங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூபாய் 3.39 கோடி ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் மஸ்கான் (MusQan) தரச் சான்றிதழ் பெற, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள குழந்தை நலப் பிரிவுகளின் தரத்தை மேம்படுத்த ஊக்கத்தொகை ரூபாய் 3.39 கோடி வழங்கப்படும்.

**118. மாநில தலைமையிட நவீன தடுப்பூசி சேமிப்பு கிடங்கின் (State Vaccine Store) கூடுதல் கட்டடம் செங்கல்பட்டு மாவட்டம்–நந்திவரம் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் ரூபாய் 66.87 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதியில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் பொது சுகாதாரத்துறையில் நவீன தடுப்பூசி சேமிப்பு கிடங்கு (State Vaccine Store) தற்போது சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. கோவிட்–19 தடுப்பூசிகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தடுப்பூசிகளும் அதற்குரிய உபகரணங்களும் சேமிக்க கூடுதல் கட்டடம் தேவைப்படுகிறது. எனவே செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில், ரூபாய் 66.87 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பூசி சேமிப்பு கிடங்கு கட்டப்படும்.

## 119. அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் புகார் மற்றும் ஆலோசனைகளை நேரடியாக பெற்று நடவடிக்கை எடுக்கும் வகையில் மருத்துவமனை வரவேற்பு பிரிவில் ஒருங்கிணைப்பு அலுவலர் நியமிக்கப்படுவர்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் புகார் மற்றும் ஆலோசனைகளை நேரடியாக பெற்று நடவடிக்கை எடுக்கும் வகையில் மருத்துவமனை வரவேற்பு பிரிவில், ஒருங்கிணைப்பு அலுவலர் நியமிக்கப்படுவர்

**120. 1,021 உதவி மருத்துவர்கள், 3,287 மருத்துவம் சார்ந்த இதர பணியிடங்கள் உள்ளிட்ட 4,308 காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள்.**

நடப்பாண்டில், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 1,021 உதவி மருத்துவர்கள், 788 உதவி மருத்துவர் (பொது), 173 உதவி மருத்துவ அலுவலர் (ஆயுஷ்), 3 திறன்மிகு உதவியாளர் தரம்–2 (மின்வினைஞர் தரம்–2), 119 உணவு பாதுகாப்பு அலுவலர், 174 கள உதவியாளர், 39 கிராம சுகாதார செவிலியர் (மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடம்), 334 சுகாதார ஆய்வாளர் நிலை–2, 86 செவிலியர் (மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடம்), 6 ஆயுர்வேதா மருந்தாளுநர், 73 சித்தா மருந்தாளுநர், 2 யுனானி மருந்தாளுநர், 3 ஹோமியோபதி மருந்தாளுநர், 335 அறுவை அரங்கு உதவியாளர், 209 இருட்டறை உதவியாளர், 25 இயன்முறை சிகிச்சையாளர் தரம்–2, 889 மருந்தாளுநர், 29 இளநிலை பகுப்பாய்வாளர் (உணவு பாதுகாப்புத் துறை) என மொத்தம் 4,308 காலிப் பணியிடங்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படும்.

**121. 10 அரசு மருத்துவமனைகளின் தர மேம்பாட்டு பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவக் கல்லூரி முதல்வர் / மருத்துவக் கண்காணிப்பாளர் கீழ் மருத்துவமனை மேலாண்மை அலுவலர் உலக வங்கி திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.**

10 அரசு மருத்துவமனைகளின் தர மேம்பாட்டு பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவக் கல்லூரி முதல்வர் / மருத்துவக் கண்காணிப்பாளர் கீழ் மருத்துவமனை மேலாண்மை அலுவலர் உலக வங்கி திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.

# XVI – சுகாதார விழிப்புணர்வு சேவைகள்

**122. தமிழ்நாட்டில் அனைவருக்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து மருத்துவம் மற்றும் சுகாதார திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகளை ஒருங்கிணைத்து பலதரப்பட்ட விழிப்புணர்வு உத்திகளை பயன்படுத்தி தகவல் கல்வி தொலைதொடர்பு விழிப்புணர்வு ஏற்படுத்த ரூபாய் 15 கோடி செலவிடப்படும்.**

தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து மருத்துவம் மற்றும் சுகாதார திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகளை ஒருங்கிணைத்து பலதரப்பட்ட விழிப்புணர்வு உத்திகளை பயன்படுத்தி பொது மக்களிடையே தகவல் கல்வி தொலைதொடர்பு விழிப்புணர்வு ஏற்படுத்த ரூபாய் 15 கோடி செலவிடப்படும்.

**123. அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், மதுரை, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பள்ளி சுகாதார தூதுவர்களாக ஆசிரியர்களுக்கு (School Health Ambassadors) பயிற்சிகள், ரூபாய் 6.47 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், மதுரை, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள வளரிளம் பருவ மாணவ மாணவியர்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்காக (Counselling, Awareness on substance abuse etc.,) பள்ளி சுகாதார தூதுவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு (School Health Ambassadors) ரூபாய் 6.47 கோடி மதிப்பீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**124. தமிழ்நாட்டில் புகையிலை கட்டுப்பாடு திட்டம் செயல்படும் 30 மாவட்டங்களில் உள்ள சுமார் 6,000 கல்வி நிறுவனங்களில் "புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் விழிப்புணர்வு" நிகழ்ச்சிகள், ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.**

பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்களிடையே புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் பழக்கத்தை போக்கும் விதமாக 30 மாவட்டங்களில் சுமார் 6,000 கல்வி நிறுவனங்களில் "புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் விழிப்புணர்வு" நிகழ்ச்சிகள் ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

## 125. சூடான உணவு பொருள்களை பிளாஸ்டிக் பைகளில் விற்கும் நடைமுறைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

சூடான உணவு பொருள்களை பிளாஸ்டிக் பைகளில் விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். தேநீர் மற்றும் காபி போன்ற பானங்கள் பிளாஸ்டிக் பைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. உணவகங்களில் இட்லி, சாம்பார், ரசம், சாதம், போன்ற உணவு பொருட்கள் பிளாஸ்டிக் பைகளில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்வாறு பிளாஸ்டிக் பைகளில் பேக்கிங் செய்யும் போது பிளாஸ்டிக் பைகளில் உள்ள நுண்துகள்கள் உணவில் கலந்து, உணவின் தரத்தை முற்றிலும் மாற்றிவிடுகிறது. மேலும், இதனால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது. பொதுமக்கள் தங்கள் இல்லங்களிலிருந்து பாத்திரம் எடுத்துச் செல்லும் வழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். எனவே, இது குறித்து உணவகங்களுக்கும், தேநீர் கடைகளுக்கும், பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதோடு இந்த செயலில் தொடர்ந்து ஈடுபடும் உணவகங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

## 126. உணவு பொருள்களின் பாக்கெட்டுகளில் உள்ள முகப்பு சீட்டில் (Label) உள்ள விபரங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின்படி உணவு பொருள்கள் முறையாக பேக்கிங் செய்யப்பட்டு, அதன் முகப்பு சீட்டின் (Labelling) மீது அந்த உணவுப் பொருளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகளின் விபரம், சைவம் அல்லது அசைவம் போன்ற விபரம், அந்த பொருள் தயாரிக்கப்படும் இடத்தின் பெயர், உற்பத்தி மற்றும் காலாவதியாகும் நாள் விபரம், உற்பத்தி செய்த நாளிலிருந்து பயன்படுத்தப்பட வேண்டிய கால அளவு, போன்ற முழுமையான விபரம் பொது மக்களின் நன்மைக்கு அச்சிடப்படுகிறது. இந்த விபரங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு பொதுமக்களிடம் இல்லை. எனவே, இது குறித்து, பொது மக்கள் இந்த முழுமையான விபரங்களை அறிந்து பயன் பெற ஏதுவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**127. வேளாண் துறையினருடன் இணைந்து "ஆர்கானிக்" உணவு பொருள்களினுடைய உற்பத்தி முறைகள், பரிசோதனை முறைகள் மற்றும் விற்பனை குறித்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

"ஆர்கானிக்" உணவு என்ற பெயரில், உரிய வழிமுறைகளைப் பின்பற்றாமல், அதிக விலையில் பொருட்கள் விற்கப்படுகின்றன. எனவே, வேளாண் துறையினருடன் இணைந்து "ஆர்கானிக்" உணவு பொருள்களினுடைய உற்பத்தி முறைகள், பரிசோதனை முறைகள் மற்றும் விற்பனை குறித்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

# XVII – இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

## 128. நாமக்கல் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் 60 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் 60 படுக்கைகள் கொண்ட முழுமையான சித்த மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

## 129. டாம்ப்கால் நிறுவனத்தின் முதல் உற்பத்தி அலகில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூரில் உள்ள டாம்ப்கால் மருந்துகள் உற்பத்தி நிலையத்தில் நவீன மாத்திரை தயாரிக்கும் இயந்திரம்–1, மருந்து குப்பிகள் நிரப்பும் இயந்திரம்–1, 1000 சதுர அடி பரப்பளவிற்கு குளிர்பதன பண்டக அறை வசதி மற்றும் மருந்து தயாரிப்பு இயந்திரங்கள் உள்ள இடத்தில் மைய குளிர்பதன வசதி போன்றவை ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

## 130. பதிவு பெற்ற பரம்பரை மருத்துவர்களின் ஓய்வூதியம் ரூபாய் 1,000–லிருந்து ரூபாய் 3,000–ஆக உயர்த்தப்படும்.

ஆண்டு வருமானம் ரூபாய் 24,000–கும் குறைவாக இருக்கும் பதிவு பெற்ற பரம்பரை சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கு தற்போது ரூபாய் 1,000 மாதம் தோறும் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுவோர் 100–க்கும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் ஓய்வூதியத்தினை உயர்த்தி வழங்க தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. எனவே, பதிவு பெற்ற சித்தா, ஆயுர்வேதம், யுனானி, மற்றும் ஓமியோபதி பரம்பரை மருத்துவர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்பட்டு வரும் ரூபாய் 1,000 ஓய்வூதியம் நடப்பு ஆண்டு முதல் ரூபாய் 3,000–ஆக உயர்த்தி வழங்கப்படும்.

## 131. மூலிகைப் பயிர்கள் வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்க பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்.

தமிழ்நாட்டில் மூலிகைப் பயிர் சாகுபடி செய்ய, மூலிகை பங்குதாரர்களாகிய விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த மண்டல வாரியாக நான்கு இடங்களில் பயிர் சாகுபடி பயிற்சி பட்டறை மற்றும் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள், தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும். மேலும் ஆடாதொடை, நொச்சி, நில வேம்பு, ஆமணக்கு, ஊமத்தை, முருங்கை, பிரண்டை, அஸ்வகந்தா, துளசி, வெட்டிவேர், கற்பூரவல்லி, எருக்கு போன்ற மூலிகை பயிர்களின் சாகுபடி முறைகள் மற்றும் அதனால் அடையும் லாபம் பற்றி பரிந்துரைக்கப்படும்.

**132. "இளஞ்சி மன்றம்" என்ற இளஞ்சிறார் மன்றம் அரசு பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு மூலிகைகள், மூலிகை பயிர்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் "இளஞ்சி மன்றம்" என்னும் இளம் சிறார் மன்றம் ஏற்படுத்தி, அதில் அப்பள்ளி மாணவர்களை சேர்த்து அவர்களுக்கு மூலிகைகள், மூலிகை பயிர்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், தேசிய மருத்துவ பயிர்கள் வாரியம் நிதியுதவியுடன் பள்ளி வளாகத்தில் ஒரு மூலிகை தோட்டம் அமைத்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 133. திண்டுக்கல் மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் மூலிகை பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும்

தமிழகத்தில் மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் மற்றும் வேடசந்தூரிலுள்ள மத்திய விவசாய ஆராய்ச்சி நிலைய உதவியுடன் முதற்கட்டமாக திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் அஸ்வகந்தா பயிர் சாகுபடி செய்யப்படும்.

## 134. ஒரே இடத்தில் செயல்பட்டு வரும் ஏழு சித்த ஆயுஷ் நல மையங்கள் மற்றும் ஒரு தேசிய ஊரக நலத் திட்ட சித்த பிரிவு ஆகியவற்றை எட்டு இடங்களில் மாற்றி நிறுவப்படும்.

ஏழு சித்த ஆயுஷ் நல மையங்கள் மற்றும் ஒரு தேசிய ஊரக நலத் திட்ட சித்த மருத்துவப் பிரிவு ஆகிய எட்டு பிரிவுகள் முறையான சித்த மருத்துவப் பிரிவுகள் உள்ள ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த பிரிவுகளை இச்சேவை தேவையான இடங்களுக்கு மாற்றி அங்கு புதிதாக துவக்கப்படும்.

## 135. டாம்ப்கால் நிறுவனத்தின் வாயிலாக புதிதாக அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

டாம்ப்கால் நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கு பொது மக்களிடம் சிறப்பான வரவேற்பு உள்ளது. எனவே, அதன் அடிப்படையில் மக்களுக்கு தரமான பிற அழகு சாதனப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய டாம்ப்கால் நிறுவனத்தின் வாயிலாக புதிதாக அழகு / இயற்கை நலப் பொருட்களை உரிய தரத்துடன் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 136. தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் இந்திய மருத்துவமுறை மருந்துகளின் தரத்தினை குறைந்த செலவில் சோதனை செய்து தரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருந்துகள் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பே மிகுதியாக உள்ளது. இந்நிறுவனங்கள் தயாரித்த மருந்துகளின் தரத்தினை சோதனை செய்ய மாநிலத்தில் உள்ள பிற தனியார் துறை பகுப்பாய்வு கூடங்கள் அல்லது பிற மாநிலங்களில் உள்ள பகுப்பாய்வு கூடங்களுக்கு அனுப்பி முடிவுகளை பெறுகின்றன. எனவே, தரமான சோதனையை குறைந்த செலவில் செய்ய வகை செய்யும் வகையில் இந்திய மருத்துவத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவில் அதி நவீன தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன் குறைந்த கட்டணத்தில் தனியார் நிறுவனங்களின் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளின் தரத்தினை சோதனை செய்து தரப்படும்

**திரு. மா. சுப்பிரமணியன்**

மருத்துவம் மற்றும் மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர்

"மருத்துவமனை கட்டிடத்தினால் சிறப்படைவதில்லை, அங்கே இருக்கின்ற கருவிகளால் சிறப்படைவதில்லை, அங்கே இருக்கின்ற இருக்கைகளால் சிறப்படைவதில்லை, அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்களால் தான் ஒரு மருத்துவமனை சிறப்படைகிறது"

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்